WWW.ASKNETWORK.NET

Tamil

/ASKING WITH THE WORD OF GOD/

தேவனுடைய வார்த்தையின்படி கேட்டல்

... அவருடைய வல்லமையையும், வெளிப்பாட்டையும்,
தீர்க்கதரிசன சத்தியத்தையும் விடுவிக்கிறது.

உமது சகல பிரஸ்தாபத்தைப் பார்க்கிலும்
உமது வார்த்தையை நீர் மகிமைப்படுத்தியிருக்கிறீர். சங்கீதம் 138:2

"என் நாமத்தினாலே கேளுங்கள்..." *என்று இயேசு கூறினார்.*

நாம் ஜெபித்து செயல்படுவதற்கு முன் தேவனுக்குச் செவிகொடுக்க வேண்டும் என்பது ஆஸ்க் வலையமைப்பின் தனித்துவமான அழைப்பு. தேவன் தம்முடைய வார்த்தையின் மூலம் பேசக் காத்திருக்கும் நாம், பரிசுத்த ஆவியானவர் நமக்கு வெளிப்படுத்தும் காரியங்களுக்குப் பதிலளிக்கும் பொறுப்பை ஏற்று, ஊக்கத்துடன், கருத்தாய் ஜெபித்து, பின்னர் அதற்குக் கீழ்ப்படிகிறோம். தேவன் தம் மகிமைக்காகவும், தம் நோக்கங்களை நிறைவேற்றவும் நம்முடைய வார்த்தைகளையும் செயல்களையும் வல்லமையாய் பயன்படுத்துகிறார்.

தேவன் சொல்ல விரும்புவதைக்
கவனித்துக் கேளுங்கள்...
நீங்கள் ஜெபிப்பதை அவர் கவனித்துக்
கேட்கிறார்.

தேவனுடைய வார்த்தையின்படி
ஜெபிப்பதற்கான எளிய வழிமுறைகளைக்
காண, பின்பக்கத்தைத் திருப்பிப் பாருங்கள்.
கூடுதல் போதனைகளுக்கு எங்கள்
வலைதளத்தைப் பார்வையிடுங்கள்.



சபைக்காகவும், சமுதாயங்களுக்காகவும், எல்லா தேசங்களுக்காகவும் தேவனுடைய வார்த்தையை வைத்து ஜெபியுங்கள்

தேவனுடைய வார்த்தையின்படி ஜெபிப்பது என்பது வேதாகமத்தைத் திறந்து, அதிலுள்ள சத்தியங்களை அறிக்கையிடுவது போன்ற எளிய செயலாக இருக்கலாம். ஆனால் அந்த வார்த்தையைத் தியானிக்கும்போது இன்னும் ஆழமாகப் புரிந்துகொள்ள முடியும். பரிசுத்த ஆவியானவரே சிறந்த போதகர். இந்த எளிய வழிமுறைகளைப் பின்பற்றி, ஆழமும் உயிரோட்டமுமான ஜெபத்தில் ஈடுபடும்போது, அவர் உங்களை சகல சத்தியத்திற்குள்ளும் நடத்த அனுமதியுங்கள்.

இயேசு செய்ததுபோல **ஜெபிப்பதற்கென்று நேரத்தை ஒதுக்குங்கள்.** அவர் வழிநடத்துகிறபடி உபவாசியுங்கள்.
லூக்கா 5:16; மத்தேயு 6:17

இயேசு கற்பித்தபடி, முடிந்தால் **மற்றவர்களோடு இணைந்து** ஜெபியுங்கள். மத்தேயு 18:19–20

பாவ அறிக்கையோடும் மனந்திரும்புதலோடும் **உங்களை ஆயத்தப்படுத்துங்கள்.**
1 யோவான் 1:9

தேவனை ஆராதித்து, அவருடைய குணாதிசயங்களை அறிக்கையிடுங்கள்.
மத்தேயு 6:9

பரிசுத்த ஆவியானவரின் பாதுகாப்பிற்காக வேண்டிக் கொள்ளுங்கள். எபேசியர் 6:10–18

தேவன் தம் இருதயத்தில் இருப்பதை உங்களுக்கு உணர்த்துவார் என்று எதிர்பாருங்கள். அப்போது நீங்கள் கேட்க வேண்தியதில் கவனம் செலுத்த முடியும்.
ஏசாயா 55:8

உங்களுக்கு ஏற்ற வேதப்பகுதிக்கு நேராக **தேவன் உங்களை நடத்துவார் என்று நம்புங்கள்.**
சங்கீதம் 37:23

பரிசுத்த ஆவியானவர் சில குறிப்பிட்ட வார்த்தைகள் அல்லது கருத்துகளிடம் உங்கள் கவனத்தைத் திருப்பும் வரை **வேதப்பகுதியைக் கவனமாக மீண்டும் மீண்டும் வாசியுங்கள்.**
யோவான் 16:13

வாசித்த **வேதப்பகுதியை தியானித்து,** அதைப் புரிந்துகொள்ள தேவனுடைய உதவியை நாடிக் காத்திருங்கள். சங்கீதம் 119:30

தேவன் தம் வார்த்தையில் வெளிப்படுத்தும் சத்தியம், அவருடைய நோக்கங்களுக்காக வேண்டிக்கொள்ள உங்களுக்கு உணர்த்தும் காரியத்தில் கவனம் செலுத்துங்கள்.
1 கொரிந்தியர் 2:10

தேவன் உங்களுக்கு வெளிப்படுத்துவதை எழுத்துவடிவிலோ, உரையாடல் மூலமாகவோ **மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.** இதனால் ஒவ்வொருவருக்கும் தேவன் வெளிப்படுத்துவதை அனைவரும் அறிந்துகொள்ளலாம்.
ஆபகூக் 2:2

உங்கள் விண்ணப்பங்கள் வல்லமையான ஆயுதங்கள் என்ற விசுவாசத்துடன், தேவன் உங்களுக்குக் காண்பிக்கும் காரியங்களைக் குறித்து **அவரிடம் ஜெபம் பண்ணுங்கள்.**
2 கொரிந்தியர் 10:4–6; யாக்கோபு 5:16

தேவன் உங்களை எதைச் செய்யச் சொன்னாலும், அதற்கு **அப்படியே கீழ்ப்படிய** ஆயத்தமாயிருங்கள். யோவான் 2:5

ஜெபங்களுக்குப் பதிலளிக்கிற **தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்.**
1 யோவான் 5:14